

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.05.2023) முகாம் அலுவலகத்தில், கிருஷ்ணவேணி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 337/600 மதிப்பெண்கள் பெற்ற, நாமக்கல் மாவட்டம், பள்ளிப் பாளையத்தை சேர்ந்த விசைத்தறி தொழிலாளி திருமதி ராஜேஸ்வரியின் பிள்ளை ஸ்ரேயா (திருநங்கை) சந்தித்து வாழ்த்து பெற்றார்.



சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் கிரிக்கெட் விளையாட்டின் மீது தீராத ஆர்வமும், திறமையும் கொண்ட பள்ளி மாணவ மாணவியர், IPL கிரிக்கெட் போட்டிகளை சேப்பாக்கம் மைதானத்தில் நேரில் காண ஏதுவாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வட்டம் வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர், சிறுமியருக்கு ஐபிஎல் டிக்கெட்டுகளை வாங்கித் தந்து போட்டிகளைக் காண உதவி வருகிறார்கள். அந்த வகையில், வட்டம் 119ஐ சேர்ந்த 150 சிறுவர் சிறுமியர்கள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ் Vs டெல்லி கேப்பிட்டல்ஸ் இடையேயான ஐபிஎல் போட்டியை கண்டு மகிழ்ந்தனர்.

### கோரிக்கை விடுத்த 24 மணி நேரத்தில்

# சவுதி தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மொழிப் பாடப் புத்தகங்கள்!

## சவுதி தி.மு.க. அயலக அணி நிர்வாகிகளிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே12-

சவுதி தமிழ் மாணவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று 24 மணி நேரத்துக்குள் தமிழ்ப் பாடப் புத்தகங்கள்700 ஐ ரூ.79 ஆயிரத்து 250 மதிப்பீட்டில் கழக இளைஞர் அணி அறக்கட்டளை மூலம் கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சவுதி தி.மு.க. அயலக அணி நிர்வாகி வெங்கடேசன், பிரான்ஸ் நட்பு தமிழ்ச் சங்க துணைத் தலைவர் மயிலாடுதுறை ஜெகந்நாதன் ஆகியோரிடம் வழங்கினார்.

சவுதி அரேபியாவில் உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காகச் செயல்படும் இந்தியா வழியில் - தமிழ் வழியைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இதில் 3ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு மட்டுமே மொழிப் பிரிவு பாடமாக தமிழ்ப் பயிற்றுவிக்கப்படுகிறது.

சவுதி அரேபியாவில் உள்ள கல்வி நிலையங்களில் தமிழ் மொழி பாட புத்தகம் கிடைப்பதில் சிரமம் இருப்பதை அறிந்து கடந்த ஜனவரி மாதம் உலக தமிழர் மாநாட்டில் சவுதி அரேபியா NRTIA நிர்வாகிகளான முதன்மைச் செயலாளர் மயிலாடுதுறை வெங்கடேஷ், துணை அமைப்பாளர் திருச்சி ஆரிஃப் மக்பூல், கிழக்கு மண்டலப் பொருளாளர் துறையூர் கமால், கிளைகள் அமைப்பாளர் முகவை சீனி முகம்மது உள்ளிட்டோர் கலந்து கொண்டு தமிழ் மொழி பாட புத்தகம் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிரமத்தை எடுத்துக் கூறி தமிழ்நாடு அரசு தமிழ் பாடப்புத்தகத்தை இலவசமாக தர வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்தனர்.



சவுதி அரேபியாவிலுள்ள பள்ளிகளில் 3 முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் மொழிப்பாடம் பயிற்றுவிக்கப்படுகிறது. அங்கு தமிழ் பாடநூல்கள் கிடைப்பதில்லை என்பதால், கழக அயலக அணியின் முன்னெடுப்பில், கழக இளைஞர் அணி அறக்கட்டளை மூலம் தமிழ்நாடு பாடநூல் கழகத்திடமிருந்து 700 தமிழ் மொழிப்பாடநூல்களை ரூ. 79,250க்கு வாங்கி அவற்றை, சவுதியில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு வழங்கும் வண்ணம் அயலக அணி நிர்வாகி வெங்கடேசனிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் பிரான்சு தமிழ்ச்சங்க துணைத் தலைவர் ஜெகந்நாதன் உள்ளார்.

இக்கோரிக்கையை கனிவுடன் கவனித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் மொழி பாட புத்தகம் தடையின்றி கிடைக்க ஆவண செய்தார்.

இந்நிலையில் தமிழ் மாணவர்கள் கல்விப் பயில தமிழ்ப் மொழிப் பாடப் புத்தகங்கள் தேவைப்படுவது குறித்து சவுதி தி.மு.க. அயலக அணி சார்பாக கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதய நிதி ஸ்டாலின் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கோரிக்கை விடுத்த 24 மணி நேரத்திற்குள் இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் 79 ஆயிரத்து 250 ரூபாய் செலவில் தமிழ்நாடு பாட நூல் கழகத்தில் இருந்து 700 புத்தகங்கள் வாங்கப்பட்டு சவுதி தி.மு.க. அயலக அணி நிர்வாகி வெங்கடேசனிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது பிரான்ஸ் நட்பு தமிழ்ச் சங்க துணைத் தலைவர் ஜெகந்நாதன் உடனிருந்தார்.

சவுதி தமிழ் மாணவர்களுக்காக உடனடியாக இளைஞர் அணி அறக்கட்டளை மூலம் தமிழ்ப் பாடப் புத்தகங்களை கொடுத்து உதவிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் துரிதமாக புத்தகங்கள் கிடைக்க பேருதவி புரிந்த கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சவுதி தமிழ் மாணவர்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று சவுதி தி.மு.க. அயலக அணி நிர்வாகி வெங்கடேசன், பிரான்ஸ் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் ஜெகந்நாதன் ஆகியோர் தெரிவித்துக் கொண்டனர்.

### 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற விசைத்தறி தொழிலாளி மகள்

# மேற்படிப்புக்குத் தேவையான உதவிகள் செய்து தருகிறேன்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை, மே 12-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.05.2023) முகாம் அலுவலகத்தில் நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தைச் சேர்ந்த விசைத்தறி தொழிலாளி திருமதி. ராஜேஸ்வரியின் பிள்ளை ஸ்ரேயா (திருநங்கை) சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

ஸ்ரேயா (திருநங்கை), நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் கிருஷ்ணவேணி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் படித்துள்ளார்.

இவர் இந்த ஆண்டு நடைபெற்ற 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 337/600 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர் தனது மேற்படிப்புக்கு உரிய உதவிகள் செய்திடுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மேற்படிப்புக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவேன் என உறுதியளித்தார்.

### ஈராண்டு சாதனை விளக்க மலரினை வெளியிட்டு

# 520 பயனாளிகளுக்கு ரூ.90.76 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் வழங்கினர்!

புதுக்கோட்டை, மே 12-

புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலக கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாதாந்திர உதவித்தொகை ரூ.1000 வழங்குவதற்கான ஆணைகளை வழங்கும் விழா, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் “தமிழ்நாடு அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி” என்ற தலைப்பில் ஈராண்டு சாதனை விளக்க மலரினை வெளியிட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை 09.05.2023 அன்று வழங்கினார்கள்.

இவ்விழா மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதாராமு தலைமையில் நடைபெற்றது.

மேலும் இவ்விழாவில் வேளாண்மைத்துறை 10 பயனாளிகளுக்கு ரூ.5.44 லட்சம் மதிப்பிலும், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.11.05 லட்சம் மதிப்பிலும், மாற்றுத்திறனாளி நலத்துறை 5 பயனாளிகளுக்குரூ.5.27 லட்சம் மதிப்பிலும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 500 பயனாளிகளுக்கு ரூ.69 லட்சம்மதிப்பிலான மாதாந்திர நிதியுதவி ஆக மொத்தம் 520 பயனாளிகளுக்கு ரூ.90.76 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை. முத்துராஜா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ. மதியழகன், மாவட்ட வழங்கல் அலுவலர் ஆர். கணேசன், வேளாண் இணை இயக்குநர் தபெரியசாமி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், நகர்மன்றத் துணைத் தலைவர் லியாகத் அலி, எம்.எம்.பாலு, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ்.உலகநாதன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற

# தி.மு.கழக ஆட்சியின் சாதனைகள் அடிப்படையாக அமையும்!

## இரண்டாண்டு ஆட்சியின் சாதனைகள் குறித்து இரா.முத்தரசன் பாராட்டு!



சென்னை, மே 12 -

நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற தி.மு.கழக ஆட்சியின் சாதனைகள் அடிப்படையாகஅமையும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. எல்லா நெருக்கடிகளையும், சவால்களையும் கடந்து மூன்றாவது ஆண்டில் வெற்றிகரமாக பயணத்தை தொடங்கியுள்ளது. ஆட்சிக் காலம் முழுவதும் வெற்றிகரமாக நிறைவடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறது.

இந்தியாவின் இன்றைய அரசியல் தேவை ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்துவ தாகும். இந்த அரசியல் நோக்கம் நிறைவேற இந்தியாவில் உள்ள அனைத்து மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி கட்சிகள் ஒன்றுபட்டு ஓரணியாக நிற்பது அவசியமானதாகும். அதற்கான அணியை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிகரமாக அமைத்து இந்தியாவிற்கு வழிகாட்டியது தி.மு.கழகம்.

வரவிருக்கிற 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராக உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்துவதற்காக ஒற்றை நோக்கத்துடன் ஒன்றுபட வேண்டும் என்பது தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மக்கள் நலம் சார்ந்த பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மற்ற வாக்குறுதிகளையும் நிறைவேற்றும் நோக்கத்துடன் ஆட்சியின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

ஜனநாயக ரீதியாக தோழமைக் கட்சிகள் சுட்டி காட்டியவுடன் எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் தொழிற்சாலைகள் திருத்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதை தொழிலாளர்கள் மகிழ்ச்சியோடு பாராட்டி வாழ்த்துகிறார்கள். இத்தகைய நேர்மறையான அணுகுமுறையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டுகிறது. வாழ்த்துகிறது.

வரவிருக்கிற 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களுக்கு உட்பட்ட 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற, ஆட்சியின் சாதனைகள் அடிப்படையாக அமையும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு உறுதிபட நம்புகிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.



நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், ஆண்டிப்பாளையத்தில் திருச்செங்கோடு, பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 669 ஊரக குடியிருப்புகள், ஆலாம்பாளையம், படவீடு பேரூராட்சிகள் மற்றும் சேலம் மாவட்டம் சங்ககிரி பேரூராட்சி குடியிருப்புகளுக்கு ரூ.399.46 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டத்தினை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர்அ.கணேசமூர்த்தி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா, நகராட்சி நிர்வாக ஆணையர் சி.பொன்னையா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகள் துறை இயக்குநர் கிரன் குர்லா, நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் ஸ்ரேயா பி.சிங், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவைத் தலைவருமான எஸ்.எம். மதுரா செந்தில் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




தருமபுரி கிழக்கு மாவட்டம் தருமபுரியில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். கூட்டத்திற்கு கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி தலைமை வகித்தார். உடன் நகர கழக செயலாளர் நாட்டான் மாது, நகர்மன்றத்தலைவர் மா.லட்சுமி, மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தருமச்செல்வன், எம்.ஜி.சேகர், தொகுதி பார்வையாளர் டாக்டர்.தருண், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தாமரைச்செல்வன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.